உ

சிவமயம்.

௧௬-வருஷத்திய

# பாலகிரகதோஷம்.

இதில் ஒவ்வொரு வருஷத்திற்கும் மூலமந்திர யந்திர

பரிகாரங்களுடன் அடங்கியிருக்கின்றன.



இவை, சிறுமணவூர்.

**முனிசாமி முதலியார் அவர்களால்**

எட்டுப்பிரதியிலிருந்தெழுதியதை

சென்னை, திருமயிலை.

**மாணிக்கவேலு முதலியார்**

அவர்களாற்றமது

வித்வசிரோமணிவிலாச அச்சியந்திரசாலையிற்,

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன்விலை] 1927 [அணா 2.

# விளம்பரம்.

## பதிவிரதைகள் சரித்திரம்.

இப்பரதகண்டத்தில் திருவவதாரஞ்செய்து பகவத்பக்த பூர்வமாய் பல அற்புதசித்திகளைப்பெற்று பகவானை நேரிற்கண்டு தங்கள் குறைகளைப்போக்கி மோக்ஷமெய்திய மகாபுண்ணிய சீலிகளாகிய பதிவிரதைகளின் சரித்திரங்களை மிகத்தெளிவான வசனநடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொரு மாது சிரோமணியும் வாசித்து நற்பயனடையும் வண்ணம் குறைந்தவிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

புத்தகம் 1-க்கு கிரயம் ரூபா 1 0 0

## விக்கிரமாதித்தன் கதை.

இது பூர்வத்தில் மகா பிரக்கியாதிபெற்று நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாசனத்தில் வேதாளத்தையே வாகனமாகக்கொண்டு 2000 - வருடங்கள் அரசியற்றி அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்த னென்னும் அரசன் பிரபாவங்களை அம்மன்னனுக்குப் பின்னால் அரசியற்றிய வீர சூர தீர பராக்கிரமசாலியாகிய போஜமகாராஜனுக்கு விநோதரஞ்சிதம், மதனாபிஷேகம், கோமளவல்லி, பரிமளமொகினி, கிருபா பரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான ஆச்சரியகதைகள் இடையிடையே பலவிசித்திர ஆனந்தக்கதைகள் இதிலடங்கி யிருக்கின்றன.

ஆண், பெண், பால், பாலிகைகள் யாவரும் எளிதில் வாசிக்கும் பொருட்டு பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

தின்கடிதம் விலை ரூபா 1 0 0 திக்து கடிதம் விலை 2 0 0

## ஸ்திரீ புருஷ ரகசியம் அல்லது இன்பரச சாஸ்திரம்.

இப்புத்தகம் குடும்பஸ்தர் ஒவ்வொருவர் கையிலும் அவசிய மிருக்கவேண்டியது. இதில் ஸ்திரீபுருஷர்கள் கலியாண வாழ்க்கையில் தெரிந்துக்கொள்ளவேண்டிய ரகசியங்களும் இன்னும் சம்சார இன்ப சுகத்திற்கு வேண்டிய அநேகவழிகளும் அடங்கியிருக்கின்றன. இதை போன்ற உண்மையை விளக்கக்கூடிய நூல் இதுகாறும் வெளிவந்தவில்லை.

இதன் விலை ரூபா 1 0 0

## தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி.

இஃது யாவராலும் நன்குமதிக்கப்பெற்ற ஓர் அற்புதமான செந்தமிழ் நாவல். இதில் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு இன்றியமையா அநேக அதியற்புத விஷயங்களுக்குப் பல நீதிகளும் ஒருங்கேயமைத்திருக்கின்றன. படிக்கப்படிக்கப் பரமானந்தத்தையும் கேட்கக்கேட்க இன்பத்தையும் தரும்படி மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றது.


இதன் விலை ரூபா 1 0 0

திருமயிலை - மாணிக்கவேலு முதலியார்

நெ. 170 தங்கசாலைவீதி சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை

உ

கடவுள் துணை.



# பாலகிரகதோஷ பரிகாரக்கண்ணாடி.


காப்பு விருத்தம்.

புத்திரப்பேரில்லாமல் கவலைகொண்ட
　　புண்ணியர்கள் மனக்குறையைச் சொல்லொணாது
சத்திரம்சாவடிகள் தண்ணீர்பந்தல்
　　சாலைபலசோலைகுளம் கோயில்கட்டி
எத்தனையோ தவமிருந்து நதிகளாடி
　　இடமெழுகியுண்டுபல விரதங்காத்து
புத்திரனைஈன்றெடுத்து வளர்க்குங்காலை
　　பொல்லாதகிரகதோஷம் பிடிக்கும்பாரே.

ஒண்ணை வருஷமுதல் குழந்தைகட்கு
　　ஒண்டியிருந்துதொத்துமடா கிரகதோஷந்தான்
எண்ணுமல்பலபலவாய் நினைவுகொண்டு
　　ஏலாதவைத்தியங்கள் செய்துகெட்டு
கண்ணுனபிள்ளைகட்கு மருந்தைஈந்து
　　கைசோறுமானிடர்க்கு சஞ்சீவித்தான்
விண்ணவர்க்குத்தற்பொருளாய் விளங்குகின்ற
　　விநாயகர்தன்னடிதொழுது விளம்புவேனே.

## பாலகிரகதோஷ பரிகாரக்கண்ணுடி.






சிசுபிறந்த முதல்நாள் முதல்மாதம் முதல்வருஷம்
தாட்சிவாட்சியென்னும் பெயர்தரித்த
மோகனுங்கிதேவதைவந்தணுகும்.

அதின் குணம்.

வாந்திபண்ணும்சுரமடிக்கும் பாலுண்ணாது
வளமானதிரேகமெல்லாம் மினுமினுக்கும்
காந்தியாய்கண்ணிரண்டுந் திரவாதப்பா
கழிந்தாக்கால்தண்ணீரைப்போலவோடும்
போந்தவேபூனைகுரல் போலேயழும்
பொல்லாதபலவிதமாய் விகாரஞ்செய்யும்
சாந்தியில்லாசகலமாய் கூறிவைத்தோம்
சாஸ்திரத்தின்முறைப்படியே செய்துபாரே,

இதற்குப் பரிகாரம்.

ஞாயிற்றுக்கிழமையில் பச்சரிசியுடன் உப்பிட்டுப்பொங்கி தயிர் வார்த்துப்பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து அந்த பாவைக்கு காதோலை கருமணி பஞ்சவருணநூல் கருப்பு வஸ்திரம் பலவகைபுட்பஞ்சூட்டி எள்ளு நெல்பொறி நவதானியம் பஞ்சவர்ண சாதம் ஆட்டுக்கறி முட்டை புண்ணாக்குகீரை ரொட்டி வஸ்து பழம் தாம்பூலம் தக்ஷிணை இவைகளைச்சுற்றிலும் வைத்து சந்தனந் தெளித்து தூபதீபங் கொடுத்து நிவேதனஞ்செய்து மந்திரம் பால கிரக மோகனுங்கி பாலகிரகதோஷ நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வு மென்று இப்படி 12-தடவை ஜெபித்து குழந்தையை தாயின்மடி யில்வைத்து கிரகம் அல்லது பேயின்பெயரை எழுதாஞ் சொல்லி இருவரையும் 9-தடவை சுற்றும்போது சொல்லுமந்திரம்.


மூலமந்திரம் ஓம் ஓங்காரமாக அம்மை அதன்தன்னோடும் ஆங்காரமும் ஆயுசும் அதிகமுண்டாகும் சுவாகா.

இந்த மந்திரத்தை 108-தரஞ்செபித்து குளக்கரையில் வைக்கவும் இதுவேயிதிலுள்ள பதினருக்கும் மூலமந்திரம்,

பின்பு நாயுருவிக்குக் காப்புகட்டி வேர்பிடிங்கி மஞ்சநூல் சுற்றி இதனடியில் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புதகட்டி லெழுதி நூல் சுற்றிய வேரை சக்கரத்துள் வைத்துச் சுருட்டி அவல் கடலை தாம்பூலம் புஷ்பம்வைத்து தேங்காய்யுடைத்து தூபதீபங்கொடுத்து நிவேதனஞ்செய்து இம்மந்திரத்தை ஜெபிக்கவும்.

அரி அரி சிவ சிவா அரி ஓம சிவா இப்பிள்ளைக்கு சகலதோஷமும் நிவாரணமாக 108-உருஜெபித்து குளிச்சத்திற்கு மூன்று வர்ன நூல்சுற்றி குழந்[illegible]கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்.






சிசுபிறந்த இரண்டாநாள் இரண்டாமாதம்
இரண்டாம்வருஷம் வைத்திரி நீலகண்டி யென்னும்
பெயரைத்தரித்த துர்க்கையானது வந்தணுகும்,

அதின் குணம்.

இரண்டான வருடத்தின் பாலனுக்கு
இளைக்கின்ற வருத்தங்கள் யென்னசொல்வேன்
வயிருப்புந்தலைசாயும் பேதியாகும்
வாந்திபண்ணும் தேரையைப்போல் மெலிந்துபோகும்
மிரளுமது அலரியழும் கண்சிவக்கும்
மேனியெலாம் வேர்வைவிழும் கொட்டாவித்தான்
சுரமடிக்கும் வயிறிரையும் திடுக்கிட்டுத்தான்
துள்ளியழும்பொல்லாததோஷத்தாலே.


## இதற்குப் பரிகாரம்,

திங்கட்கிழமையிலே அரிசியுடன்தும்பயிலைபோட்டுச் சமைத்து கறியில் குப்பைமேனி யிலைபோட்டு வேகவைத்து இரண்டையும் ஒன்றாகசேர்த்து வெள்ளாட்டுப்பால் விட்டுப் பிசைந்து ஆண்பாவை செய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி பஞ்சவருண நூல் பட்டுவஸ்திரஞ்சாற்றி தாமரைப்பூ சூட்டி எள்ளு வெல்லம் பச்சரிசி தாம்பூலம் தக்ஷிணை வைத்து நவதானியம் கோழிமுட்டை கச்சகருவாடு அவல்கடலை புண்ணாக்குகீரை கள்ளு சாராயம் பழம்தேங்காய் ரொட்டி சுருட்டு இவைகளை பாவை சுற்றிலும்வைத்து நெய்யினால் 5-திரிகொளுத்திவைத்து மஞ்சள் துணியிலே அரைக்காசு முடித்து பாவைக்கெதிரில் வைத்து தூபதீபம் கொடுத்து நிவேதனஞ்செய்து குழந்தையைதாயின் மடியில்வைத்து கிரகத்தின் பெயரை 11-தரஞ்சொல்லி பெட்டைக்கோழி சுற்றி மந்திரம் ஓம் ஸ்ரீயும் பாலக்கிரகதோஷம் நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வுமென்று இந்தப்படி 12-தடவை செபித்து இருவருக்கும் பாவையெடுத்து 9-தடவைசுற்றி முன்சொல்லிய மூலமந்திரத்தை 108-தரஞ் செபித்து இரவில் 7-மணிக்கு பைரவன் கோயிலில் வைங்கவும்.

பின்பு வேளைக்கு காப்புகட்டி வேர்பிடுங்கிவந்து இதனடியிற் கண்டிருக்கின்ற சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரைத் தகட்டினுள் வைத்துச்சுருட்டி மூன்றுவர்னநூல் சுற்றிதைத்து தாம்பூலம் புஷ்பம் அவல்கடலைவைத்து தேங்காய்யுடைத்து தூப தீபங் கொடுத்து சொல்லுமந்திரம்,

அரி ஓம் தன்மதேவா தரணியளந்த நம்பி நீலகண்ட மாயா சொரூப சர்வதோஷமும் படுபடு ருங்கு சூருங்கு மசிமசிநமசிவாய





சிவாவென்று 108-உரு ஜெபித்து குளிசத்தை வலதுபுரத்திற் கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்.

சிசுபிறந்த மூன்றுநாள் மூன்றுமாதம் மூன்றும் வருஷம்
விரோதகன்னி என்னும் காளிதேவதைவந்தணுகும்

இதின்குணம்.

கண்களிலே பீளையதுசேரும்நெஞ்சு
கனல்போலே யெரியுமப்பா பாலுண்ணாது
கண்சோரும் வெளுப்பாக பெதியாகும்
கல்போலே வயிருப்பும் தலையைச்சுற்றும்
எண்ணவே கயர்போல உடல்முருக்கும்
யிளைப்புமிக வுண்டாகும் சுரமடிக்கும்
பண்ணாத கோலமெல்லாம் பண்ணுமப்பா
பாலருக்கு மூன்றுவதாண்டிற்றனே.

இதற்குப் பரிகாரம்.

சோமவாரத்தில் குடுவையரிசிச் சோறு கருவாடு நெற்பொரி மாவு இவைகளைப் பிசைந்து பெண்பாவைசெய்து புதுசட்டியில் காதோலை கருமணி சந்தனம் கதம்பம் பஞ்சவர்ண நூல் சிகப்பு வஸ்திரஞ்சாற்றி மந்தாரை புஷ்பஞ்சூடி சாதம்புண்ணாக்கு அரைக்கீரைபுரட்டல் கருவாடு முட்டை ரொட்டிவஸ்து இவைகளை பாவை சுற்றிலும்வைத்து மஞ்சள்துணியில் 9-காசு முத்துக்கருப்பு பெட்டைக்கோழி காவுகொடுத்து தேங்காய்பழம் தாம்பூலம் தக்ஷிணை தூப தீப நிவேதனஞ்செய்து மந்திரம் ஓங்காளி பாலகிரக தோஷ நிவர்த்தி ஓம்ஆம் இம் ஐயும்கிலியும் சவ்வும் பாலகிரகதோஷம் நிவர்த்தியென்று 16-தடவை ஜெபித்து, கொடிக்கள்ளி 5-கிளையுள்ளதில் நெய்த்திரி சுற்றி தீபமேற்றி கிழக்கு முகமாக தாயின் மடியில் குழந்தையைக் குந்தவைத்து கிரகத்தின் பெயரைச்சொல்லி மூலமந்திரம் 108-ஜெபித்து பாவையெடுத்து 9-தடவை இருவரையுஞ் சுற்றி மாலைநேரத்தில் ஊருக்குமேற்கு சோலைக்கெதிரில வைக்கவும்

பின்பு முருங்கைக்குக் காப்பு கட்டி சிவ வங் நகரிங்கென்று வேர்பிடிங்கி வந்து இதனடியிற் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத் தகட்டில்லெழுதி வேரைவைத்துச் சுருட்டி புஷ்பஞ்சூட்டி அவல்கடலைபழம் தாம்பூலம்தக்ஷிணை வைத்துத் தேங்காய்புடைத்துத் தூப தீபம் கொடுத்து சொல்லும் மந்திரம்.

மூலமந்திரம் ஓம்ஹ்ரா சிவா ஓம் சிவாய அகோர கோர தந்தரூபா உடம்புகுளிர சர்வதோஷமும் பரிகரி படுபடு பட்சிபடுசிவாவென்று 108-உரு ஜெபித்து குளிசத்திற்கு மஞ்சள் நூல் சுற்றி குழந்தைக்கு வலதுபுரத்தில் கட்டவும்,






சிசுபிறந்த நாலாம்நாள் நாலாம்மாதம் நாலாம்வருஷம்
உருத்திரகாலாக்கினி என்னும் பைரவிதேவதை

வந்தணுகும் அதின்குணம்.

தேங்காய்ப்பூ சிதறினாற்போலே பேதியாகும்
தாயாரைக் கைவிடா தழுதிருக்கும்
பாங்கான தேகமெல்லாம் சிலிர்சிலிர்க்கும்
பாலனுக்கு வாய்தனிலே நுரையுந்தள்ளும்
யேங்கியழும் வயிருப்பும் சுரமடிக்கும்
இரண்டுவலா சுழித்திருக்கும் நடுங்குந்தேகம்
வாங்காமல் கைகால்கள் சுருதிக்கொண்டு
வலிக்குமடா உச்சியது துடிக்கும்பாரே.


இதற்குப் பரிகாரம்.

மங்களவாரத்தில் உளுத்தமாவுஞ்சோறும் பசுநெய்விட்டுபிசைந்து பெண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்து காதோலைகருமணி பஞ்சவர்னநூல் பச்சைவஸ்திரம் சாத்தி வெள்ளெருக்கம்பூ சூட்டி சாதம் கரிபுரட்டல் நெற்பொரி நவதானியம் புண்ணாக்குகீரை நெத்திலிதலை கள்ளு சாராயம் சுருட்டு தேங்காய் பழம் தாம்பூலம் தக்ஷணைவைத்து குங்குமம் கதம்பம் 9-காசு அவயவத்தில் வைத்துதூப தீபங்கொடுத்து நிவேதனஞ்செய்து புள்ளிசாவல் ஆகுதிகொடுத்து வடக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து மந்திரம் 108-ஜெபித்து ஓம் பாலகிரகபைரவி ஓம் ஆம் கிலியும் ஆம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வபாலகிரகதோஷ நிவர்தியென்று 108-தடவை ஜெபித்து பாவையை 9-தடவை இருவரையுஞ்சுற்றி உச்சிநேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங்கரையில் கொண்டுபோய் வைத்து பாவையின் வாயில்கள்ளை ஊற்றிவிட்டு வரவும்.

பின்பு நத்தைச்சூரிக்குக் காப்புகட்டி சிவயநம வென்று வேர் பிடுங்கிவந்து இதனடியிற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரை அதனுள்வைத்து சுருட்டி மஞ்சள்நூல் சுற்றிவைத்துப் புஷ்பம் தாம்பூலம் தக்ஷிணை பழம் அவல்கடலை வைத்து தேங்காயுடைத்து தூபதீபம் கொடுத்து சொல்லும் மந்திரம்

அரிஓம் சிவாயநம சடசட பிறபிற அகோர வீரபத்திரவா இப்பிள்ளைக்கு சகல தோஷமும் உடம்படுசுவாகா வென்று க௦அ - தரஞ் செபித்து குழந்தைக்குச்செய்ய சகலதோஷமும் நிவர்த்தியாகும்.





சிசுபிறந்த ஐந்தாம்நாள் ஐந்தாமாதம் ஐந்தாவருஷம்
ஆகாசபாதிரமென்னும் ஜின்னுதேவதை
வந்தணுகும் அதின் குணம்.

ஐந்தானவருடத்தில் கொடியதோஷம்
அப்பனேகுரல்கம்மியழுதும்பாலன்
மந்தமாம்வயிறுப்பும் பாலுண்ணாது
மலமெல்லாம்பலவிதமாய் கழியும்பாரு
விந்தையாய்விலாவெலும்பு உயர்ந்திருக்கும்
வேகமாய்சுரமடிக்கும் வயர்சுரக்கும்
தொந்தரைகள் பலவிதமாம் ஐந்தாமாண்டே

இதற்குப் பரிகாரம்


ஆதிவாரத்தில் பச்சரிசிமாவில் பசும்பால் ஊற்றிப்பிசைந்து பெண்பாவைசெய்து காதோலை கருகமணி பஞ்சவர்ணநூல் மஞ்சள் வஸ்திரம் புதுசட்டியில் வைத்து எருக்கம்பூ சூட்டி பொங்கலிட்டு வெல்

லம் நவதானியம் நெற்பொறி தாம்பூலம் புஷ்பம் பழம் செஞ்சாவல் காவுகொடுத்து சுருட்டு அவல்கடலை தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து நிவேதனஞ் செய்து குழந்தையை தாயின் மடியில் வடக்குமுகமாகவைத்து எலிமிச்சம் பழமறுத்து இருவரையும் சுற்றி சட்டியிலிட்டு மூலமந்திரத்தை செபித்து ஓம் ஜின்னு சகல பாலக்கிரகதோஷம் நிவர்த்தியென்று ௩-தடவை ஜெபித்து கிரகத்தின் பெயரைச்சொல்லிபின்பு பாவையெடுத்து ௯-தடவை இருவரையுஞ் சுற்றி மாலைநேரத்தில் பிடாரிகோயில் பக்கத்தில் வைக்கவும்

பின்பு ஓரிலைத்தாமரைக்குக் காப்புகட்டி மசிநயவவென்று வேர் பிடுங்கிவந்து இதனடியில்கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி வேரைவைத்துச் சுருட்டி புஷ்பஞ் சூட்டி அவல் கடலை பழம் தாம்பூலம் தக்ஷணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து சொல்லுமந்திரம்.

ஓம் நீலிகபாலி திரிசூலி சண்டாளி அரிஓம் இப்பிள்ளைக்கு சகல தோஷம் இரங்கிபடுகொய்யா சிவாவென்று க௦அ-உருஜெபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்.





சிசு பிறந்த ஆறுநாள் ஆறுமாதம் ஆறுவருஷம்
வைத்திரியென்னும் பெயர்தரித்த கன்னிதேவதை
வந்தணுகும் அதின்குணம்.

காலவீங்கும் சொக்கிருக்கும் உடல்வெளுக்கும்
கழுத்துமுதல் முகமெல்லாம் வேர்வைகாணும்
பாலதனைவேண்டாது தாகங்கேழ்க்கும்
பாலனுக்கு முதுகெலும்பு நிமிர்ந்துபோகும்
சாலவேசுரமடிக்கும் விலாவெலும்பு
சதைக்குமேல் தூக்குமடா வயிறுவீங்கும்

நாளைக்குஒருவியாதி போலேகாட்டும்
நம்பாதேசாந்தியுடன் செய்துநீக்கே.


### இதற்குப் பரிகாரம்

ஆதிவாரத்தில் அரைத்தமஞ்சள் சோறும் தூதுவேளையினிலை இலுப்பைப்புண்ணாக்கு சமைத்தகறியும் இவைகளை பிசைந்து ஆண் பாவைசெய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி சந்தனம் கதம்பம் பஞ்சவர்ணநூல் கருப்பு வஸ்திரஞ் சுற்றி மந்தாரை புட்பஞ்சூட்டி சாதம் புண்ணாக்கு அரைக்கீரை புரட்டல் கருவாடு அவல்கடலை சுண்டல் முட்டை ரொட்டி சுருட்டு வஸ்து இவைகளைப் பாவைகளைச் சுற்றிலும் வைத்து கருப்பு பெட்டைக்கோழி காவு கொடுத்து தேங்காய் பழம் தாம்பூலம் தக்ஷிணை தூபதீப நிவேதனஞ் செய்து மந்திரம் ஓங்காளி பாலகிரகதோக்ஷ நிவர்த்தி ஓம் ஆம் உம் ஐயுங் கிலியும்சவ்வும் சர்வகிரகதோஷ நிவாத்தியென்று ௨௨-தடவை ஜெபித்து கொடிகள்ளி ௩-கிளையுள்ளதில் நெய்த்திரிசுற்றி தீபமேற்றி கிழக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையை குந்த வைத்து கிரகத்தின்பெயரைச் சொல்லி மூலமந்திரம் ௧௦௮-ஜெபித்து பாவை யெடுத்து ௯-தடவை இருவரையுஞ்சுற்றி மாலை நேரத்தில்ஊருக்குமேற்கு சோலைக்கெதிரில் வைக்கவும்

பின்பு குப்பமேனிக்கு காப்புகட்டி அங் உங் சிங் வங்கென வேர் பிடுங்கி இதனடியிற் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத் தகட்டிலெழுதி நூல்சுற்றிய வேரைச் சக்கரத்தில் வைத்துச் சுருட்டி அவல் கடலை தாம்பூலம் புஷ்பம்வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து நிவேதனஞ்செய்து இந்த மந்திரத்தை ஜெபிக்கவும்.

அரி அரி காலதூதா எமதூதா ஓம் இப்பிள்ளைக்கு சகலதோஷங்களும் நிவாரணமாக ௧௦௮-உரு ஜெபித்து குளிசத்திற்கு மூன்று வர்ணநூல்சுற்றி குழந்தைக்குக்கட்ட சகலதோஷம் நிவர்த்தியாகும்.





குழந்தை பிறந்த ஏழாநாள் ஏழாமாதம் ஏழாவருஷம்
உருத்திரகௌரி யென்னும் மாரியம்மை
வந்தணுகும் அதின்குணம்

குால்கம்பி யழுகுமடா சுரமுங்காணும்
குழந்தைக்குவுச்சியது பள்ளமாகும்
புருவமது துடிக்குமடா தண்ணீர்வடியும்
பூமியிலே புரண்டழும் மிரண்டுபார்க்கும்
திரேகமதுபச்சைநிற மாகக்காட்டும்
திரண்டயிருபுருவமது துடிக்கும்பாரு
சிறந்ததொருபிள்ளைக்கு ஏழாமாண்டின்
செய்யுமாமிந்த விஷமெல்லாம்

## இதற்குப் பரிகாரம்.


மங்களவாரத்தில் பச்சரிசிமாவால் பெண்பாவை செய்து புதுசட்டியில்வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்புவஸ்திரஞ்சாற்றி வெள்ளெருக்கம்பூ சூட்டி சாதம் கருப்பு பெட்டைக்கோழி எருக்கம்பூ ஆட்டுக்கறி புரட்டல் அரிசிரொட்டிநெற்பொரி நவதானியம் புண்ணாக்குக்கீரை நெத்திலி கருவாட்டின்தலை கோழிமுட்டை கள்ளு சாராயம் சுருட்டு பழம் தேங்காய் தாம்பூலம் தக்ஷிணைவைத்து குங்குமம் சுதம்பம் ௬-காசு அவயவங்களில் வைத்து தூபதீபங்கொடுத்து நிவேதனஞ் செய்து புள்ளிசாவலை ஆகுதி வடக்குமுகமாக தாயின்மடியில் குழைந்தையைக் குந்தவைத்து மந்திரம் ௧0அ-ஜெபித்து மந்திரம் ஓம் பாலகிரகப்பைரவி ஓம் ஆம் ஸ்ரீயும் கிலியும் சவ்வும் சர்வபாலகிரகதோஷ நிவர்த்தியென்று ௧0அ-தடவை ஜெபித்து பாவையை ௬-தடவை இருவரையுஞ்சுற்றி உச்சிநேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங்கரையில் கொண்டுபோய் வைத்து பாவையின் வாயில் கள்ளை ஊற்றிவிட்டுவரவும்.

பின்பு வில்வமரத்திற்கு காப்புகட்டி நமசிவய சிவாயமென்று வேப்பிலையும் கோழியிறகும் பொலியிட்டு வேர்பிடுங்கி இதனடியிற் கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்பு தகட்டிலெழுதி வேரைவைத்து சுருட்டி மஞ்சள்நூல்சுற்றி மஞ்சள்பிள்ளையார்சுத்தி அதற்கெதிரில் குளிசத்தை வைத்து புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் தக்ஷிணை பழம் அவல் கடலைவைத்து வேப்பிலை யரிசியுங்கலந்து ௩-மொந்தையில் பொங்க விட்டுவைத்து தேங்காயுடைத்து தூபங்கொடுத்து சொல்லும்மந்திரம்.

ஓம்சிவா இப்பிள்ளைக்குச் சர்வதோஷமும் படுமென்று க0அ-தரம்செபித்து குழந்தைக்குக்கட்ட சர்வதோஷமும் நிவர்த்தியாகும்

சிசுபிறந்த எட்டாநாள் எட்டாமாதம் எட்டாம்வருஷம்






சுப்பிரமாதங்கி யென்னும் போர்தரித்த பகவதிதேவதை

வந்தணுகும் அதின் குணம்,

தலைசுழலும் கண்சுழலும் அயர்ந்துபோகும்
    தண்ணீர்போல் பேதியாகும் வாந்திபண்ணும்
நிலைதவராகளைப்புண்டாம் தலையும்சாயும்
    நினைக்கவொண்ணு பலவிதமாய் கினவுகாணும்
அலருமடா சுரங்காயும் சிரங்குங்காணும்
    அப்பனே கண்திரவா திருக்கும்பாரு
பலவிதமாய் இதுபோல விகாரப்பண்ணும்
    பாலருக்கு எட்டான வருடந்தானே.


இதற்குப் பரிகாரம்.

சோமவாரத்தில் பச்சரிசிமாவு எள்ளு பால்சோறு பாவற்காய் இவைகளைப் பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் ஊதாவஸ்திரம் செவ்வலரி புஷ்பஞ்சூட்டி குங்குமம் சந்தனம்தூவி சாதம் சுட்ட கருவாடு புரட்டிய ஆட்டுக்கறி முட்டை ரொட்டி வஸ்து சுருட்டு அவல்கடலை சுண்டல் புண்ணாக்கில் புரட்டியகீரை கொழக்கட்டை பழம் தாம்பூலம் தக்ஷிணை வைத்து கூ-காசு மஞ்சள் துணியில் முடிந்துவைத்து ஐந்துதிரி கொளுத்தி பாவையைச் சுற்றிலும்வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து வெள்ளைச்சாவல் காவுகொடுத்து மூலமந்திரம் க0அ செபித்து கிரகத்தின் பெயர்சொல்லி கிழக்கு முகமாக தாயார்மடியில்

குழந்தையைக் குந்தவைத்து ஓம் பகவதி ஐயும் கிலியும் சவ்வும் பக வதி பாலகிரகதோஷம் நிவர்த்தி யென்று கசு-தடவை ஜெபித்து இருவரையும் கூ-தடவை சுற்றி அந்திநேரம் அயன்கோயிலுக்கு எதி ரில் ஆலமரத்தடியில் வைக்கவும்.

பின்பு ஊமத்தனுக்குக் காப்புகட்டி தங் மங் சிங் வங்யங்கென் றுவேர்பிடுங்கி வந்து இதனடியிற் கண்டிருக்கும் சக்கரத்தை செப்பு த்தகட்டிலெழுதி வேரைவைத்துச் சுருட்டி மஞ்சள் நூல் சுத்தி புஷ் பஞ் சூட்டி தாம்பூலம் வாழைப்பழம் அவல்கடலை வைத்து தேங்கா யுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்

ஓம் ஆங்காரிவேதா சர்வதோஷ நாசி இப்பிள்ளைக்கு தோஷம் பட்சிகனுயா படுபடு சுவாகாவென்று க0அ-உருஜெபித்து குழந்தைக் குக்கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்.






சிசுபிறந்த ஒன்பதாம்நாள் ஒன்பதாம்மாதம் ஒன்பதாம் வருஷம்
குணத்திவாயாக்கினியென்னும் பெயர்தரித்த குடோரி
தேவதை வந்தணுகும் அதின்குணம்.

மஞ்சளாய் பேதியாகும் கண்கள்வீங்கும்
மைந்தனது காலிரண்டும் பின்னும்பாரு
கொஞ்சுகின்ற முகமதுதான் வெளுத்துக்காணும்
குழந்தையது நித்திரையுஞ்செய்யாதண்ணேன்
திஞ்சவே சுரமடிக்கும் வயர்கடுக்கும்
தூங்குமடா யிரண்டுவிலா உயர்ந்துபோகும்
அஞ்சாதே யிதற்குள்ள பரிகாரந்தான்
அடுத்தாப்போ லுரைத்திட்டோம் செய்துநீக்கே


### இதற்குப் பரிகாரம்

ஆதிவாரத்தில் செம்பாளை யரிசி சோறும் சந்தனமுங் கலந்து பிசைந்து பெண்பாவை செய்து புதுசட்டியிலே வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் சிவப்புவஸ்திரஞ் சாற்றி செவ்வலறிப்பூ சூட்டி பழம் அவல்கடலை ரொட்டி வஸ்து சாதம் புண்ணுக்குக்கீரை கதம்பப்பொடிதூவி தூபதீபங்கொடுத்து கருப்பு சாவல் பலியிட்டு மூலமந்திரம் க0அ - ஜெபித்து கிரகத்தின் பெயரைச்சொல்லி கிழக்கு முகமாக தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து கூ-காசு அவயவங்களில் தாம்பூலம் தக்ஷிணைவைத்து மந்திரம் ஓம் பாலகிரக குடோரி ஐயுங் கிலியும் சவ்வும் பாலகிரகதோக்ஷ நிவர்த்தி இப்படி ௩க-தடவை சுற்றியிரக்கி அந்திநேரத்தில் மேற்குத்திசையில் குளத்து கீழ்கரையில் வைத்து கணுபூதமென்று சொல்லி பாவையின் வாயில் கள்ளுவார்த்து வரவும்

பின்பு முக்கிரட்டைக்குக் காப்புகட்டி ஓம் சிவாயநம வென்று வேர்பிடிங்கிவந்து இதனடியில் கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி வேரை அதனுள் வைத்துக்சுருட்டி பழம் மஞ்சள் நூல் சுற்றிவைத்து வெள்ளைப்பூச் சூடி பழம் அவல்சுடலை தாம்பூலம் தக்ஷிணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து சொல்லுமந்திரம்-

ஓம் அங்காரிவேதவேதாளி சர்வபக்ஷணி பிள்ளைதோஷபக்ஷணி படு படு சுவாகாவென்று க0அ-உருஜெபித்து சூளிசத்தைக் குழந்தைக்குக் கட்ட சர்வதோஷமும் நிவர்த்தியாகும்





சிசு பிறந்த பத்தாநாள் பத்தாமாதம் பத்தாம் வருஷம் ஆகஞ்சி லாலாக்கினிதேவி என்னும் பெயர்தரித்த ருத்திரி தேவதை வந்தணுகும் அதின் குணம்.


தேகமேமெலிந்துபோகும் பேதியாகும்
திடமானகைகால்கள் வலிபோற்காணும்
வேகமாய் சுரமடிக்கும் உருவேமாரும்
வயிர்கடுக்கும சிலந்தியின்கட்டிகாணும்
சோகமாய்மூர்ச்சையது வந்துமாரும்
சுளுவாக கால்கைகள் நோயுண்டாகும்
பாகமாயிதற்குடனே பரிகாரந்தான்
பாட்டின்கீழ்கூறிவிட்டோம் பகர்ந்துக்கொள்ளே.

இதற்குப் பரிகாரம்.

மங்களவாரத்தில் பச்சரிசிசோறு அவித்த நாணைக்கிழங்கு கறி நெற்பொறி பொறிமாவு இவைகளைச்சேர்த்துபிசைந்து பெண்பாவை பண்ணி புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் கருப்பு வஸ்திரம் சாத்தி சந்தனந்தெளித்து வெள்ளை புஷ்பஞ்சூட்டி அவல்கடலை தாம்பூலம் தக்ஷிணைவைத்து சாதம் புண்ணாக்குகீரை சுருட்டுவெஸ்து பழம் கூ-காசு முடித்துவைத்து தேங்காயுடைத்து தூப தீபங்கொடுத்து மூலமந்திரம் கO அ-தரம் ஜெபித்து மேற்குமுகமாக தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து மந்திரம் ஓம்ருத்திரி ஐயுங்கிலியும்சவ்வும் சர்வபாலகிரகதோஷநிவர்த்தி இப்படி கஉ-தடவை ஜெபித்து பாவையெடுத்து குழந்தைக்கு கூ-தடவைச்சுற்றி பேயின் பெயரைச்சொல்லி அந்த வேளையில் கிழக்குத்திசையில் வைக்கவும்.

பின்புநில ஆவரைச்குக் சாப்புக்கட்டி ஒஓ ஆஆ சிசீ வையென்று வேர்பிடுங்கிவந்து இதனடியிற் கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புத்த கட்டிலெழுதி வேரைவைத்துச் சுருட்டி மஞ்சள்நூல் சுற்றிவைத்து புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் தக்ஷிணை பழம் அவல்கடலை வைத்துதேங் காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லும் மந்திரம்.

அரிஓம் அரங்சி அகாரமந்திரா ஆசுகோரரூபா அகோரபட்சி இப்பிள்ளைக்கு தோஷம் படுபடு சுவாகாவென்று 108-உருஜெபித்து குளிசத்தை குழந்தைக்குக் கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்





சிசுபிறந்த பதினோருநாள் பதினோருமாதம் பதினோருவருஷம்
பஞ்சமிபாதிரி மாகாளியென்னும் பெயர்தரித்த ஜடாதரி
தேவதை வந்தணுகும் அதின் குணம்.

அடிக்கடிக்கு சுரமடிக்கும் வேர்வைகாணும்
அப்பனேசிறுநீர்தான் மஞ்சளாகும்
துடிதுடிக்கும்தேகமெல்லாம் வீக்கமாகும்
துகளுமடாணுவதுதான் வரண்டுபோகும்
கடுகடுக்கும்வெரிகுணங்கள் அதிகமாகும்
கண்டபடிசேஷ்டைசெய்யும் வயர் நான்வுப்பும்
படுத்திட்டதோஷங்கள் நிவர்த்திசெய்து
பாலருக்குவுயிர்கொடுத்து பாதுகாரே.


இதற்குப் பரிகாரம்.

சுக்கிரவாரத்தில் எருமைப் பால்விட்டுப்பொங்கிய பச்சரிசிசோறும் குறுஞ்சானிலே போட்டுச் சமைத்த கறியும் ஒன்றாகச்சேர்த்துப்பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில்வைத்துகாதோலை கருமணி செகப்பு வஸ்திரஞ் சாற்றி பஞ்சவர்ணநூல் தும்மைப்புஷ்பஞ் சூட்டி பழம் அவல்கடலே சுண்டல் ரொட்டி வஸ்து தாம்பூலம் தக்ஷணைவைத்து தேங்காயுடைத்து தூபதீப நிவேதனஞ்செய்து ஐந்து எலுமிச்சம்பழ மருத்து மூலமந்திரம் ௧௦௮-ஜெபித்து கிரகத்தின்பெயர்சொல்லி வடக்குமுகமாக தாயின்மடியில் குழந்தையைக்குந்தவைத்து மந்திரம் ஓம் படாகாரி ஐயுங்கிலியும் சவ்வும் சர்வ பாலகிரகதோஷநிவர்த்தி இப்படி ௧௦௮-தடவைஜெபித்து பாவையை எடுத்து கூ-தடவை இருவரையுஞ்சுற்றி மாலையில் நாலு சந்துகூடுமிடமான அரசமரத்தடியில் வைக்கவும்

பின்பு எருக்கன் செடிக்குக் காப்புகட்டி ஓம் சிவவென்றுவேர்பிடுங்கிவந்து இதனடியிற் கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்புதகட்டிலெ

மூதி அதினுள் வேரைவைத்துச்சுருட்டி புஷ்பஞ்சூட்டி அவல் கடலை தாம்பூலம் தக்ஷணை வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம் வம் அரக்கினிமாகாளி சத்திரூபாயம்மே ஐயுங்கிலியும் சவ்வும் பட்டு இப்பிள்ளைக்கு சர்வதோஷமும் நசிநசிசிவாயவென்று கOஅ-தரம்செபித்து குளிச்சத்தைகுழந்தைக்குக்கட்ட சர்வதோஷம் நிவர்த்தியாகும்.






சிசுபிறந்த பன்னிரண்டாம்நாள் பன்னிரண்டாம்மாதம்
பன்னிரண்டாம்வருஷம் அரக்கிஉச்சங்கி யென்னும்
பெயர்தரித்த நீலிதேவதை வந்தணுகும் அதின் குணம்.

கண்வலையும் வாக்திபண்ணும் கொடிபோல்துவளும்
கதிரவன்போல் காயுமடா விக்கல்காணும்
தண்ணியது கேட்குமடா சேய்போல்திரியும்
தவளைசொரி போலுடலில் சிரங்குகாணும்
எண்ணைபோல திரேகம்மல்லா மினுமினுக்கும்
இளவலாய் மஞ்சனைப்போல் பேதியாகும்
பன்னிரண்டாம் வருஷத்தில் தோஷஞ்சொன்னேன்
பக்குவமாய் பரிகாரஞ் செய்துநீக்கே


இதற்குப் பரிகாரம்.

சோமவாரத்தில் புண்ணாக்கு அரைக்கீரை கருவாடு சோறு இவைகளைச் சேர்த்துப் பிசைந்து ஆண்பாவைசெய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருபணி பஞ்சவர்ணநூல் பச்சை வஸ்திரம் பருத்திக்கொட்டையும் வேப்பிலையுஞ் சூட்டி கோழிமுட்டை சாராயம் அவல்கடலை சுருட்டு ரொட்டி சுண்டல் பழம் தாம்பூலம் தக்ஷணை வைத்து ஏழுதிரிகொளுத்தி பாவைச்சுற்றிலும் வைத்து தேங்காயுடைத்து நிவேதனஞ்செய்து தூபதீபம்பகொடுத்து மஞ்சள் புள்ளி சாவல் காவுகொடுத்து மூலமந்திரம் கOஅ-தரம் ஜெபித்து கிழக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து கிரகத்தின்பெய

ரைச்சொல்லி மந்திரம் ஓம் பாலகிரகளீலி ஐயுங்கிலியும் சவ்வும் சர்வ பாலகிரகதோஷநிவர்த்தி இப்படி கசு-தடவை செபித்து பாவை யெடுத்து சு-கடவைச்சுற்றி இரவில் ஏமனுக்கு ஊருவடக்குமுன்மூன்று சந்து கூடுமிடல்தில் வைககவும்.

பின்பு வட்டக்கிலுகிலுப்பைக்குக் காப்புகட்டி ஓம் சி உ உ சி சி அ என்றுவேர்பிடுங்கிவந்து இதனடியிற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி அதனுள்வேரைவைத்து மஞ்சநூல்சுற்றிபுஷ்பம் பழம் அவல்கடலை தாம்பூலம் தக்ஷணை மஞ்சள்பிள்ளையார் முன் வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லு மந்திரம்.

ஓம் ஆம் தேவிதிரிபுரமாகாளிசிவாநந்தி அம்மேதாயே அடியேனுகிய இந்த சிசுவை காக்க சிவாவென்று 108-தடவை ஜெபித்துக் குளிச்சத்தை குழந்தைக்குகட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும்.






சிசுபிறந்த பதிமூன்றும்நாள் பதிமூன்றும்மாதம்
பதிமூன்றும் வருஷம் உச்சங்கி என்னும்
பெயர் தரித்த பிடாரிதேவதை
வந்தணுகும் அதின்குணம்.


பார்த்தவர்கள் பயித்தியந்தான் யென்றுசொல்லி
பண்ணுமடா குணங்களெல்லா மாரிப்போகும்
கார்த்திருந்த ஜன்னியென்ற தோஷந்தொத்தும்
கண்ணிரண்டில் ஒருபார்வை மரைந்துபோகும்
வேர்த்துவிடும் பேதியாகும் வெதுப்புண்டாகும்
விதவிதமாய் பலபலவாய் விகாரஞ்செய்யும்
பேர்த்தெறிந்து பதின்மூன்றும் வருஷமென்று
பக்குவமாய் பரிகாரம் பாகம்செய்யே.

## இதற்குப் பரிகாரம்.

மங்களவாரத்தில் பால்சோறு கருவாடு கள்ளு ஆட்டுக்கறி இவைகளைப் பிசைந்து பெண்பாவை செய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் நீலவஸ்திரஞ்சாற்றி செவ்வலரிப்பூ புஷ்பஞ்சூட்டி பதிமூன்று எலுமிச்சம்பழமருத்து சட்டியிலிட்டு பொங்கலிட்டு வடை சுண்டல் அவல்கடலை சுருட்டு ரொட்டி வஸ்து பழம் முருங்கக்கீரை புண்ணாக்குக் கருவாடு ஆட்டுக்கறி தாம்பூலம் தக்ஷிணைவைத்துத் தேங்காய்யுடைத்து செஞ்சாவல் காவுகொடுத்து தூபதீப நிவேதனஞ்செய்து மூலமந்திர ௧௦௮-ஜெபித்து வடக்கு முகமாக தாயார்மடியில்குழந்தையைகுந்தவைத்து கிரகத்தின்பெயர்சொல்லி மந்திரம் ஓம் பாலகிரகதோஷ நிவர்த்தி ௧௯-தடவை ஜெபித்து பாவையையெடுத்து ௯-தடவைசுற்றி உச்சிநேரத்தில் ஊருக்கு வடபுரத்தில் மாடுகட்டும்கொட்டாயிக்கெதிரில் வைக்கவும்.

பின்பு வட்டகிலுகிலுப்பைக்குக் காப்புகட்டி அங் உங்கென்று வேர்பிடுங்கிவந்து இதனடியிற்கண்டிருக்குஞ் சக்கரத்தை செப்பு தகட்டிலெழுதி வேரைஅதினுள்வைத்துச் சுருட்டி மஞ்சள்நூல்சுற்றி வைத்து புஷ்பஞ்சூட்டி தாம்பூலம் தக்ஷிணை பழம் அவல்கடலைசாணிபிள்ளையார் அருகுசூட்டி தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம் ஆதிசிவாசிவாவென்றுக௦௮-உரு ஜெபிக்கு குளிசத்தை குழந்தைக்குக்கட்ட சர்வதோஷமும் நிவர்த்தியாகும்.





## சிசு பிறந்த பதினாலாம்நாள் பதினாலாம்மாதம் பதினாலாம் வருஷம் மாடனென்னும் பெயர்தரித்த உக்கிரவீரன் வந்தணுகும் அதின் குணம்

வயற்றுநோய் உண்டாகும் குளிருங்காயும்
வாய்வுதான் அதிகரித்து பேதியாகும்
நோய்கண்ட பிள்ளையைப்போல் மெலிந்துபோகும்
நில்லாது பலவிதமாய் பேதியாகும்
பயித்தியம் பிடியத்வர்போல் அலையவேண்டாம்
பதினான்காம் வருடத்தின் தோஷங்கண்டால்
வயித்தியங்கள் செய்துடலை கெடுக்கவேண்டாம்
வளமானபரிகாரஞ் செய்துநீக்கே.


### இதற்குப் பரிகாரம்

சுக்கிரவாரத்தில் எருமைத் தயிர் வார்த்தசோறு நாய் சீரகம் வழுதலங் கத்தரிக்காய் சமைத்து இவைகளைச் சேர்த்துப் பிசைந்து ஆண்பாவை செய்து புதுசட்டியில் வைத்து காதோலை கருமணி மூன்றுவர்ணநூல் வெள்ளைவஸ்திரம் வெள்ளைபுஷ்பஞ் சூட்டிசந்தனம் புனுகு கதம்பம் குங்குமம் ஊதுவத்தி அலங்கரித்து பச்சரிசி பொங் கல் மதுமாமிசம் சுருட்டு ரொட்டி உப்பு கடலை மாமிசம் கஞ்சா ஆட்டுக்கறி கருவாடு தாம்பூலம் தக்ஷிணை பழம் அவல்கடலை வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து மூலமந்திரம் க0அ-ஜெபித்து மேற்குமுகமாக தாயார்மடியில் குழந்தையை குந்தவைத்து மந்திரம் ஓம் பாலக்கிரகதோஷ நிவர்த்தி இப்படி ரு-தடவை ஜெபித்து பாவை யெடுத்து ங-தடவை கிரகத்தின் பெயரைச் சொல்லி இருவரையுஞ் சுற்றி முச்சந்தியில் வைக்கவும்.

பின்பு குட்டிவிளாவுக்குக் காப்புகட்டி நமசிவாவேன்று வேர் பிடுங்கிவந்து இதனடியிற் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட் டிலெழுதி அதனுள் வேரைவைத்துச் சுருட்டி மஞ்சள்நூல் பழம் அவல்கடலை தாம்பூலம் தக்ஷிணைவைத்து சந்தனந்தெளித்து தேங்கா யுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

அரிஓம் மாடவா என்று மாசணிசர்வ ஜனபயங்கர அந்திமாடா உதிரபொசிமாடா ஓம் பட்சிபடு சிவாயா நம சிவசிவ சிவாவென்று க0அ-உரு ஜெபித்து குளிசத்தை குழந்தைக்குக் கட்ட சகலதோ ஷம் நிவர்த்தியாகும்.





சிசுபிறந்த பதினைந்தாம்நாள் பதினைந்தாம்மாதம்
பதினைந்தாம் வருஷம் பேச்சியம்மனென்னும் பெயர்தரித்த
மயானருத்திரி வந்தணுகும் அதின்குணம்.


பதினான்கு வருடத்தின் தோஷஞ்சொன்னேன்
பரிகாரம் அதற்குடனே அடுக்காய்ச்சொன்னேன்
விதியாலேமுடிவானல் யாராலுண்டு
வினையிருந்தால் முடிவேது யின்னங்கேளு
பதியாமல் சுரமடிக்கும் பற்கடிக்கும்
பதறுமடா நாய்போல சிதறும்பாரு
ததிவேளை பலவிதமாய் நுழையவேண்டாம்
தக்கபடி பரிகாரம் செய்து நீக்கே.

இதற்குப் பரிகாரம்.

ஆதிவாரத்தில் பச்சரிசிமாவால் பெண்பாவைசெய்து காதோலை கருமணி விபூதி உருண்டைமஞ்சள் குங்குமம் கதம்பம் வாசனைதிரவியம் மயிற்கொண்ணைபுஷ்பம் கருப்புவஸ்திரம் பச்சரிசிபொங்கல் இளநீர் பாணக்கம் கரும்பு வெள்ளரிக்காய் பழம்தேங்காய்கருவாடுநெத்திலிமதுமாமிசம் ரொட்டி வடைசுண்டல் முட்டை பொரித்துபொங்கிய சாதத்தை பஞ்சவர்னமாக ஐந்து முட்டைசெய்து புதுசட்டியில் வைத்து ஆட்டுக்கறி மஞ்சள் தாம்பூலம் தக்ஷிணை இவைகளும் சட்டியிலிட்டு தூபதீபங்கொடுத்து நிவேதனஞ்செய்து மூலமந்திரம் ௧௦௮-ஜெபித்துகிழக்குமுகமாக தாயார்மடியில் குழந்தையைக்குந்தவைத்து ஶ்ரீயும் கிலியும் பாலகிரகப்பட்சி சர்வபாலகிரகதோஷம் நிவர்த்தி யென்று ௧௬-தடவை ஜெபித்து ௯-தடவை கிரகத்தின் பெயரைச்சொல்லி இருவரையுஞ்சுற்றி தூபதீபங்கொடுத்தவுடன் வேப்பமரத்தடியில் வைக்கவும்.

பின்பு வாசலில் வட்டமாக யெழுதி நெல்போட்டு புதுகலசத தில கும்பம்வைத்து வேப்பிலையணிந்து அம்மனைபோல் பாவித்து பல புஷ்பஞ்சூட்டி சாதங்கறி படயல்போட்டு அரைத்தமஞ்சளால் குழந் தையைப்போல் செய்து வேப்பிலைசாற்றி சாவல் பலியிட்டு பின்பு திருநீற்றுப் பச்சைக் காப்புகட்டி ௩-எலுமிச்சம்பழம் காவுகொடுத்து ஓம் ரங் ரங்டிங்கென்று வேர்பிடுங்கிவந்து இதனடிற் கண்டிருக்கு சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி வேரைவைத்துச் சுருட்டி புஷ் பம்பழம் அவல்கடலை தாம்பூலம் தக்ஷிணைவைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம்.

ஹரி ஓம் மயானருத்திரி பேச்சிவா நாமா ஆங்காளி விரி உத் தண்டபேச்சி சிசுபட்சணி யென்று கைகூப்பி சின்னபாச்சானி ஓம் ருத்திர பேச்சிவா நமசிவாயாவென்ற க0அ- உருஜெபித்து குளிசத் தை குழந்தைக்குக் கட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும்.





சிசுபிறந்த பதினாறும்நாள் பதினாறும்மாதம் பதினாறும் வருஷம் தெய்வகன்னி யென்னும் பெயர்தரித்த பாலமோஹினி வந்தணுகும் அதின்குணம்.

பருவமடா பதினாம் வருடந்தன்னில்
பாலருக்கு யௌவனமும் அழகுண்டாகும்
சிரசுநோய்காணுமடா திருஷ்டியாலே
சிறுவருக்குமுகம்வெளுக்குங் கைகாலோயும்
அருமையாய்ப்பரிகாரம் செய்துநீக்கே
அவனியிலேயாவருமே தெரிந்துகொள்ள
பெருயுள்ள'வித்வசிரோமணிவிலாச அச்சிக்கூடத்தில்
பேசிடவே அச்சிட்டார் அதனைப்பாரீர்.

### இதற்குப்பரிகாரம்.

சுக்கிரவாரத்தில் உளுந்துமாவில் பெண்பாவைசெய்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் பட்டுவஸ்திரம் சுகந்த மல்லி தவனம் புஷ்பஞ்சூட்டி பாசிபயர் பொங்கல் சுண்டல் வடை தோசை பரமான்னம் பழம் தேங்காய் கரும்பு நெய் நிவேதனஞ்செய்து மஞ்சள் சந்தனம் பழம் சக்கரை புனுகு வங்காளப்பச்சை துவரம் பருப்பு பச்சரிசி வாசனையுள்ள புஷ்பம் தாம்பூலம் தக்ஷிணை வைத்து அவல் கடலை வைத்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து மூலமந்திரம் க0அ-உருஜெபித்துஉக-எலுமிச்சம் பழமறுத்து குழந்தை தலையைச் சுற்றி எறிந்து விடவும்.

மந்திரம் ஓம் சிவசிவா பாலக்கிரபமோகினி ஐயும்கிலியும் சவ்வும் பாலகிரகதேவகன்னி சர்வபாலகிரகதோஷநிவர்த்தி இப்படி எ-தடவை ஜெபித்து ங-தடவைசுற்றி ஆற்றங்கரையில் வைக்கவும்.






பின்பு கஞ்சாங்கோரைக்குக் காப்புகட்டி ஹரிஓம் நங்நங் சிங்சிங் வங்வங்யென்று வேர்பிடுங்கி இதன்மேற் கண்டிருக்கும் சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி வேரை அதனுள் வைத்து மஞ்சள் பிள்ளையார் புஷ்பம் பழம் தாம்பூலம் தக்ஷிணை வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொல்லுமந்திரம் அரிஓம் கன்னிவா நமா மன்மதன் கன்னி ஐயும் கிலியும் பட்டுபடுபடு சிஞ்சினபட்சி நவிநாராயணி பட்டுபடுபடு சுவாகாவென்று க0அ-தரஞ் ஜெபித்து குளிசத்தைக் கட்ட சகலதோஷமும் நிவர்த்தியாகும்.

பாலகிரகதோஷ பரிகாரக்கண்ணாடி

முற்றிற்று.